**தலைப்பு 406 – சூரியசக்தி, காற்று மற்றும் நீர்மின் உற்பத்தி கருத்திட்ட அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

சூரியசக்தி, காற்று மற்றும் நீர்மின் உற்பத்தி கருத்திட்ட அபிவிருத்தி இராஜாங்க அமைச்சின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் சூரியசக்தி, காற்று மற்றும் நீர்மின் உற்பத்தி கருத்திட்ட அபிவிருத்தி இராஜாங்க அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2021 யூலை 07 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் அமைச்சிற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2021 யூலை 30 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சூரியசக்தி, காற்று மற்றும் நீர்மின் உற்பத்தி கருத்திட்ட அபிவிருத்தி இராஜாங்க அமைச்சின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக

ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் அமைச்சால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு அமைச்சின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

சூரியசக்தி, காற்று மற்றும் நீர்மின் உற்பத்தி கருத்திட்ட அபிவிருத்தி இராஜாங்க அமைச்சினால் முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் தேவையொன்று காணப்படாமையால் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான பரிந்துரை சமர்ப்பிக்கப்படவில்லை.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

**ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களை கணக்கீடு செய்யும் போது பின்வரும் குறைபாடுகள் வெளிப்படுத்தப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மின்சக்தி அமைச்சிலிருந்து பெறப்பட்ட ரூபா 10,359,937 பெறுமதியான 331 நிதியல்லா சொத்து விடயங்கள் இராஜாங்க அமைச்சினால் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருந்த போதிலும், 2021 நவம்பர் 20 ஆம் திகதிய 06/2020 ஆம் இலக்க பாதீட்டு சுற்றறிக்கையின் பிரகாரம் அந்த சொத்துக்களை கையேற்று கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2020 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் மின்சக்தி அமைச்சினால் வழங்கப்பட்ட சொத்துக்கள் முறையாக இராஜாங்க அமைச்சிற்கு கையளிக்காமையினால் நிதிக் கூற்றுக்களில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை . | 2021 நவம்பர் 20 ஆம் திகதிய 06/2020 ஆம் இலக்க பாதீட்டு சுற்றறிக்கையின் பிரகாரம் உரிய சொத்துக்களை கையேற்று கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 1,849,246 பெறுமதியான சொத்துக்கள் நிதி நிலைமைக் கூற்றில் காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்கள் எதிர்பார்த்த தரத்தில் காணப்படாமையின் அடிப்படையில் கணக்கீடு செய்யப்படாதிருந்ததுடன், 2021 சனவரி மாதம் மீண்டும் உரிய நிறுவனத்திற்கு மீள அனுப்பப்பட்டிருந்தது. | சகல சொத்துக்களையும் கொள்வனவு செய்யப்பட்ட சந்தர்ப்பத்தின் போதே கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

-------------------------

**2.1 செலவின முகாமைத்துவம்**

----------------------------------------------

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதிப் பிரமாணம் 50 (ii) இன் பிரகாரம் இயலுமான வரை முழுமையாகவும், சரியாகவும் செலவின மதிப்பீடு தயாரிக்க வேண்டியிருந்த போதிலும், அவ்வாறு செயற்பாடாமையின் அடிப்படையில் இராஜாங்க அமைச்சினால் 2020 ஆம் ஆண்டிற்குரிய குறை நிரப்பு மதிப்பீடு ஒதுக்குதல் மூலம் 02 செலவின விடயங்களுக்காக ரூபா 1,500,000 தொகை மிகை நிதி ஏற்பாடு பெறப்பட்டிருந்ததுடன், அது மதிப்பீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாட்டுடன் ஒப்பிடும் போது 200 சதவீதம் முதல் 500 சதவீதம் வரையாக காணப்பட்டது. | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்ப சரியாக உள்ளது என தயவுடன் அறியத்தருகின்றோம். மதிப்பீடு தயாரிக்கும் போது சில விடயங்கள் தொடர்பாக எதிர்வு கூறுதல் முடியாதிருந்தமையின் அடிப்படையில் இந்த குறைபாடுகள் ஏற்பட்டிருந்தன. | நிதி பிரமாணம் 50(ii) இன் பிரகாரம் இயலுமான வரை முழுமையாகவும், சரியாகவும் செலவின மதிப்பீட்டை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 06 செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 345,000 தொகையான தேறிய நிதி ஏற்பாடுகளில் 100 சதவீதமும் மேலும் 11 செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 7,265,000 தொகையான தேறிய நிதி ஏற்பாடுகளில் 31 சதவீதம் முதல் 92 சதவீதம் வரை பயன்படுத்தப்படாமல் காணப்பட்டது. | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்பு சரியானது என அறியத்தருகின்றோம். எதிர்வு கூறப்பட முடியாத பொருளாதார மற்றும் சமூக சிக்கல்களுக்கு இடையில் வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டை பயன்படுத்தும் தேவை காணப்படாமையின் அடிப்படையில் இந்த நிலைமை ஏற்பட்டிருந்தது. | மதிப்பீடு இயலுமான வரை சரியாக தயாரிக்கப்பட வேண்டும். |

## 2.2 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினால் மேற்கொள்ளப்படவேண்டிய உறுதிப்படுத்தல்.

பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினால் கீழே குறிப்பிடப்படுகின்ற விடயங்கள் தொடர்பாக உறுதிப்படுத்தப்பட வேண்டியிருந்த போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

| | **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|
| (அ) | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டுக்காக ஆக்கபூர்வமான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையொன்று பேணிச் செல்லப்படுவதை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அந்த முறைமையின் வெற்றித் தன்மை தொடர்பாக முன்னர் மேற்கொள்ளப்பட்ட மீளாய்வினைச் செய்து அதன் பிரகாரம் முறைமையை ஆக்கபூர்வமாக ஆக்குவதற்கு தேவையான மாற்றங்களை செய்யவேண்டியிருந்தமையும், அந்த மீளாய்வு எழுத்து மூலம் மேற்கொண்டு அதன் பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்பு சரியானது என தயவுடன் அறியத்தருகின்றோம். முறையான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையொன்று மிகவும் குறுகிய காலத்தில் ஸ்தாபிப்பதற்கு சகல விதத்திலும் முயற்சி எடுக்கப்பட்டுள்ளதுடன், 2021 ஆம் ஆண்டின் போது சரிசெய்து கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என தயவுடன் அறியத்தருகின்றோம். | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | போதிலும் அவ்வாறான மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டமைக்கான கூற்று கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | உள்ளக கணக்காய்வு இலக்குகளை சரியான பிரகாரம் அமுல்படுத்துவதற்காக ஆக்கபூர்வமான முறைமையொன்று உள்ளமை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரினால் உறுதிப்படுத்த வேண்டிய போதிலும் அறிக்கையின் 5.1 மற்றும் 5.2 ஆம் பந்திகளில் குறிப்பிடப்பட்ட அவதானிப்பின் பிரகாரம் அந்த தேவைப்பாடுகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்பு சரியானது என தயவுடன் அறியத்தருகின்றோம். இந்த குறைபாடுகளை பூர்த்தி செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது என அறியத்தருகின்றோம். | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**2.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களின் ஏற்பாடுகளுக்கு இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து காண்பிக்கப்படுகின்றது.

| **அவதானிப்புக்கள்** | | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|
| **சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு** | **இணங்காமைகள்** | | |
| (அ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை<br>நிதிப் பிரமாணம் 138, 139 | நிதிப் பிரமாணங்களில் குறிப்பிடப்பட்ட ஒழுங்குமுறையான செயற்பாடுகள் பின்பற்றப்படாமல் ரூபா 11,885.71 பெறுமதியான கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்பு சரியானது என தயவுடன் அறியத்தருகின்றோம். | கொடுப்பனவு செய்யும் போது நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

(ஆ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் தாபன விதிக் கோவை

| | | | |
|---|---|---|---|
| VI ஆம் அத்தியாயத்தின் 2.10 ஆம் பந்தி. | இந்த பந்தியின் பிரகாரம் உத்தியோகத்தரின் சம்பளத்தை அதிகரித்தல், பதிற்கடமை நியமனம், இடமாற்றம் போன்ற விடயங்கள் தொடர்பாகவும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அறிக்கையிட வேண்டியிருந்த போதிலும், இராஜாங்க அமைச்சினால் அதற்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்பு சரியானது என தயவுடன் அறியத்தருகின்றோம். 2021 ஆம் ஆண்டு முதல் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | தாபன விதிக் கோவையின் ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

(இ) **முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை**

| | | | |
|---|---|---|---|
| 2017 செப்டம்பர் 20 திகதிய 04/2017 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை | உத்தியோகத்தர்களை ஆட்சேர்த்தல், கேட்டு விலகுதல், சேவையை விட்டுச் செல்லல், சேவையில் இருந்து விலக்குதல், ஓய்வு பெற்றுச் செல்லல் மற்றும் மரணமடைதல் போன்ற விடயங்களின் காரணமாக ஏற்படுகின்ற பதவியணியினர் மாற்றங்களின் பிரகாரம் நாளதுவரையாக்கப்பட்ட பதவியணியினர் தகவல்கள் ஒவ்வொரு காலாண்டின் இறுதியின் போது ஒரு மாதத்திற்குள் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு அனுப்பப்பட வேண்டிய போதிலும், இராஜாங்க அமைச்சினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்பு சரியானது என தயவுடன் அறியத்தருகின்றோம். 2021 ஆம் ஆண்டு முதல் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | உரிய சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

---

### 3.1 திட்டமிடல்

---

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 ஆகஸ்ட் 09 ஆம் திகதி ஸ்தாபிக்கப்பட்ட சூரியசக்தி காற்று மற்றும் நீர்மின் உற்பத்தி கருத்திருட்ட அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு அத்திகதி முதல் மீளாய்வாண்டின் இறுதி வரை செயல் நடவடிக்கைத் திட்டமொன்று இன்றி செயற்பட்டிருந்தது. மேலும் 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய 02/2020 ஆம் இலக்க அரச நிதி சுற்றறிக்கையின் 03 ஆம் பந்தியின் பிரகாரம் எதிர்வரும் வருடத்திற்கான வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் மீளாய்வாண்டின் திசெம்பர் 15 ஆம் திகதிக்கு முன்னர் தயாரிக்கப்பட்டு அங்கீகாரத்திற்காக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், அதற்கு இணங்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்பு சரியானது என தயவுடன் அறியத்தருகின்றோம். 2021 ஆம் ஆண்டு முதல் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய 02/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 03 ஆம் பந்தியின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.2 பெறுகைகள்

---

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இராஜாங்க அமைச்சினால் மீளாய்வாண்டின் போது பெறுகைத் திட்டமொன்று தயாரிக்கப்படாத போதிலும், ரூபா 1,849,246 பெறுமதியான நிதியல்லா சொத்துக்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. மேலும் 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய 02/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 04 ஆம் | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்பு சரியானது என தயவுடன் அறியத்தருகின்றோம். 2021 ஆம் ஆண்டு முதல் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய 02/2020 ஆம் இலக்க அரச நிதி சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| பந்தியின் பிரகாரம் எதிர் வரும் ஆண்டின் மீண்டெழும் மற்றும் மூலதன திட்டங்களை அமுல்படுத்துவதற்கான வருடாந்த பெறுகைத் திட்டம் மீளாய்வாண்டின் திசெம்பர் 10 ஆம் திகதிக்கு முன்னர் தயாரிக்கப்பட்டு பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் அங்கீகாரத்தை பெற்று அதன் பிரதி தேசிய பெறுகைகள் ஆணைக்குழுவிற்கும், கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கும் அரச நிதி திணைக்களத்திற்கும் அனுப்பப்பட வேண்டிய போதிலும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | |

**3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்**

---

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிப் பிரமாணம் 128(1)(உ) மற்றும் 2016 மார்ச் 31 ஆம் திகதிய 05/2016 ஆம் இலக்க அரச நிதி சுற்றறிக்கையின் பிரகாரம் அதன் 3.1 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டுள்ள கால அட்டவணையில் ஒவ்வொரு அமைச்சினாலும் வருடாந்த பொருள் மெய்மெய்யாய்வு மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும், இராஜாங்க அமைச்சினால் 2020 ஆம் ஆண்டிற்காக பொருள் மெய்மெய்யாய்வு மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | மின்சக்தி அமைச்சிலிருந்து சொத்துக்கள் கையேற்கப்படாதிருந்ததுடன், கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்கள் 2021 சனவரி மாதம் மீண்டும் உரிய நிறுவனங்களுக்கு அனுப்பப்பட்டமையினால் பொருள் மெய்மெய்யாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | உரிய சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

4. **நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்ளல்.**

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| (அ) 2017 யூலை 25 ஆம் திகதிய 02/2017 ஆம் இலக்க தேசிய சுற்றறிக்கையின் பாதீட்டு சுற்றறிக்கையின் பிரகாரம் 2015 ஆம் ஆண்டின் போது ஐக்கிய நாடுகளின் அங்கத்தவ நாடுகளினால் இணங்கப்பட்ட நிலைபேறான 17 அபிவிருத்தி நோக்கங்களுக்கு இடையே சூரிய சக்தி, காற்று மற்றும் நீர்மின் உற்பத்தி கருத்திட்ட அபிவிருத்தி இராஜாங்க அமைச்சுக்கு நேரடியாக உரித்தான நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் என்ன என்பது தொடர்பாக குறிப்பாக இனங்காணப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்பு சரியானது என தயவுடன் அறியத்தருகின்றோம். 2021 ஆம் ஆண்டு முதல் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | அமைச்சுக்கு நேரடியாக உரித்தான நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் என்ன என குறிப்பாக இனங்காணப்பட வேண்டும். |
| (ஆ) நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அமுல்படுத்துதல் தொடர்பாக 2020 ஆம் ஆண்டின் உள்ளக சுற்றறிக்கை அல்லது வழிகாட்டல்களை விநியோகிப்பதற்கோ அல்லது அது தொடர்பான ஆர்வமொன்றை காட்டுகின்ற தரப்பினருக்கு அறிவித்து பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களையோ அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்பு சரியானது என தயவுடன் அறியத்தருகின்றோம். 2021 ஆம் ஆண்டு முதல் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அமுல்படுத்துவதற்கு தேவையான நிகழ்ச்சித் திட்டங்கள் அமுல்படுத்தப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்வதற்கு மனித, பௌதீக வளங்கள் மற்றும் நிதி ஏற்பாடுகள் எவை என இனங்காணப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்பு சரியானது என தயவுடன் அறியத்தருகின்றோம். 2021 ஆம் ஆண்டு முதல் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இதற்குத் தேவையான மனித, பௌதீக வளங்கள் மற்றும் நிதி ஏற்பாடுகள் எவ்வாறு உள்ளது என இனங்காணப்பட வேண்டும். |
| (ஈ) | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை நிறைவேற்றுவதற்கான பௌதீக வளங்கள் மற்று பதவி அணியினரை ஈடுபடுத்தும் திட்ட முறைமையொன்று அது தொடர்பான பணிகளை நிர்ணயிப்பதற்கான திட்டமொன்று இனங்காணப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்பு சரியானது என தயவுடன் அறியத்தருகின்றோம். 2021 ஆம் ஆண்டு முதல் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை நிறைவேற்றுவதற்கான பௌதீக வளங்கள் மற்றும் பதவியணியினர் ஒன்றை ஈடுபடுத்தும் திட்ட முறைமையொன்றும், அது தொடர்பான பணிகளை நிர்ணயிப்பதற்கான திட்டமொன்றும் இனங்காணப்பட வேண்டும். |

**5. நல்லாளுகை**

---------------------

**5.1 உள்ளகக் கணக்காய்வு**

---------------------------------------

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 40 ஆம் பிரிவு மற்றும் 2019 சனவரி 12 ஆம் திகதிய DMA/01-2019 ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கையின் 03 ஆம் பந்தியின் பிரகாரம் ஒவ்வொரு அமைச்சுக்காகவும் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் நேரடி மேற்பார்வையின் கீழ் இலங்கை கணக்காளர் சேவையின் I வகுப்பின் உத்தியோகத்தர் தலைமை வகிக்கின்ற உள்ளக கணக்காய்வு அலகொன்றை ஸ்தாபித்து அதன் | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்பு சரியானது என தயவுடன் அறியத்தருகின்றோம். இலங்கை கணக்காளர் சேவையின் I தரத்தின் உத்தியோகத்தரின் கீழ் உள்ளக கணக்காய்வு அலகொன்று ஸ்தாபிக்கப்பட்டு 2021 ஆம் ஆண்டு முதல் உரிய பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும். | தேசிய கணக்காய்வு சட்டம் மற்றும் அதற்குரிய சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

மூலம் தமது உள்ளக கணக்காய்வு திட்டத்தை தயாரித்து அதன் பிரதியொன்று முகாமைத்து கணக்காய்வு திணைக்களத்திற்கும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கும் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், இராஜாங்க அமைச்சினால் அதற்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 5.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்து குழு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 41 ஆம் பிரிவு மற்றும் 2019 சனவரி 12 ஆம் திகதிய DMA/01-2019 ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கையின் 5.1 ஆம் பந்தியின் பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினால் தமது அமைச்சுக்காக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவொன்று ஸ்தாபிக்கப்பட்டு அதில் 5.3 ஆம் பந்தியின் பிரகாரம் ஆகக் குறைந்தது காலாண்டிற்கு ஒரு தடவை கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு கூட்டம் நடாத்த வேண்டிய போதிலும், இராஜாங்க அமைச்சு ஸ்தாபிக்கப்பட்ட 2020 ஆகஸ்ட் 09 ஆம் திகதி முதல் அறிக்கைத் திகதி வரையிலும் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்பு சரியானது என தயவுடன் அறியத்தருகின்றோம். 2021 ஆம் ஆண்டு முதல் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | தேசிய கணக்காய்வு சட்டம் மற்றும் அதற்குரிய சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |